ஆதிகால மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நடந்தே சென்றனர். சிறிது காலத்திற்குப் பிறகு மரக்கட்டைகளை ஒன்றாகக் கட்டி மிதவைகளாகப் பயன்படுத்திக் கடந்தனர். ஆறுகள் இவர்களின் முக்கியமான போக்குவரத்துச் சாதனமாகவும் அமைந்தன.



தங்களின் போக்குவரத்து வசதிக்காகக் கால்நடைகளைப் பயன்படுத்தினர். கால்நடைகளை வண்டிகளில் பூட்டிப் பொருள்களை எடுத்துச் சென்றனர். நாகரிக முன்னேற்றங்கள் ஏற்பட்டதும் கால்நடை வண்டிகளுக்கு மாற்றாக இயந்திரத்தால் இயங்கும் வண்டிகள் உருவாக்கப்பட்டன. மனிதர்கள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப பல இடங்களுக்கு இலகுவாகப் பயணம் செய்தனர்.

பல கண்டுபிடிப்புகளால் மிதிவண்டி, பேருந்து, மகிழுந்து, தொடர்வண்டி, உந்துருளி போன்ற பல வாகனங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பயணம் செய்ய விமானங்களும் கப்பல்களும் உருவாக்கப்பட்டன. பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கும் இத்தகைய போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன.



அன்று எளிமையான முறையில் சாதாரணமாகக் கப்பல்களாக இருந்தவை இன்று பல மாடிகளைக் கொண்ட நவீன சொகுசுக் கப்பல்களாக வளர்ச்சி கண்டுள்ளன. அறிவியலும் தொழில்நுட்பமும் மனிதர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்திக் கொண்டே இருக்கின்றன. முன்னேற்றம் கண்ட சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் அதிவிரைவு மின்தொடர் வண்டிகள் மக்களின் முக்கியமான போக்குவரத்துச் சாதனமாக உள்ளன.





பொதுப்போக்குவரத்து வசதிகளை மக்கள் நாடுகின்றனர் என்பது இன்றைய சூழலில் நாம் அறிந்த ஒன்றே. மக்களின் தேவைகளை நன்கு உணர்ந்தே பல நவீனப் போக்குவரத்து வசதிகள் இன்று சேவையில் உள்ளன. போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்தில் பேருந்து, விரைவுப் பேருந்து, விரைவுத் தொடர்வண்டி போன்ற வசதிகள் நாளுக்கு நாள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இவை யாவும் மக்களின் பயணத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

LIVEWORKSHEETS

மேற்காணும் உரைநடையை வாசித்து முக்கிய கருத்துகளை அடையாளங்கண்டு வரிசைப்படுத்துக.

LIVEWORKSHEETS

போக்குவரத்து வசதிக்காக கால்நடைகளைப் பயன்படுத்தினர்

பொதுப்போக்குவரத்து வசதிகளை மக்கள் நாடுகின்றனர். போக்குவரத்து நெரிசலைக் குறைக்வும் உதவுகின்றது.

ஆதிகால மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நடந்தே சென்றனர்.

பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ய போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டது.

இயந்திரத்தால் இயங்கும் வண்டிகளை உருவாக்கப்பட்டது. வாகனங்கள் உருவாக்கப்பட்டன.

அறிவியல் தொழில்நுட்பமும் மனிதர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்துகின்றது.

அன்று சாதாரணமாக எளிமையான கப்பல்களாக இருந்தவை இன்று பல மாடிகளைக் கொண்ட நவீன சொகுசுக் கப்பல்களாக வளர்ச்சி கண்டுள்ளன.

LIVEWORKSHEETS